<table>
<tr><th colspan="2">உறுதிமொழி # 10: பங்கேற்பு முறையுடன் அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளை அனர்த்த முகாமைத்துவத்திற்கு பொறுப்பான அமைச்சு அடையாளங் கண்டு, தயாரித்து, நடைமுறைப்படுத்தி, கண்காணித்தல்.</th></tr>
<tr><td colspan="2">1 ஒக்டோபர் 2018 – 30 செப்ரம்பர் 2020</td></tr>
<tr><td>முன்னணி நடைமுறைப்படுத்தல் நிறுவனம்/செயற்பாட்டாளர்</td><td>அனர்த்த முகாமைத்துவ அமைச்சு ; அனர்த்த முகாமைத்துவ நிலையம்</td></tr>
<tr><td colspan="2">உறுதிமொழி விளக்கம்</td></tr>
<tr><td>உறுதிமொழி அடையாளப்படுத்தப் போகும் பொதுப் பிரச்சினை என்ன?</td><td>அண்மைக் காலமாக இலங்கையின் வானிலை மற்றும் காலநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கடுமையான மழைவீழ்ச்சி, வெள்ளம், மண்சரிவு, வரட்சி மற்றும் மின்னல் என்பன அதிகரித்துள்ளன. மக்கள் தொகையில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலானோர் குறிப்பாக மக்கள் தொகையில் செல்வாக்கு குறைந்தவர்கள், அடிமட்டத்தில் போதியளவு முன்னாயத்தம் இன்மையால் இந்த இயற்கை அனர்த்தங்களால் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர். அண்மைக் காலமாக இயற்கை அனர்த்தங்களின் காரணமாக உயிரிழப்புக்கள், காயங்கள் மற்றும் சொத்து இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.அனர்த்தங்களுக்கு அதிகரித்த பலவீனத் தன்மையானது குறிப்பிடத்தக்க பொருளாதார மற்றும் சமூக சுமையினை குடிமக்கள் மீது ஏற்படுத்தியுள்ளது. வழங்கப்பட்ட நிவாரண மற்றும் நிதியுதவியிலும் பெரும் கறையை ஏற்படுத்தியுள்ளன.</td></tr>
<tr><td>உறுதிமொழி என்ன?</td><td>அனர்த்த முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்பன, சமுதாயங்கள், பாதிக்கப்பட்ட மக்கள், மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன், அவர்களது தேவைகளை அடையாளங் காண்பதற்கும், தற்போதுள்ள அனர்த்த முன்னாயத்த திட்டங்களை மீளாய்வு செய்வதற்கும், மற்றும் அனர்த்த முகாமைத்துவ வழிகாட்டிகளை தயாரிப்பதற்கும் இணைந்து செயற்படும்.வழிகாட்டிகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் பங்குதாரர்களுக்கு பயிற்சி வழங்கப்படும். மாவட்ட, பிரதேச மற்றும் கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் அனர்த்த முன்னாயத்த திட்டங்களை தயாரிப்பதில் சமுதாயங்கள் ஈடுபடும்.முன்னெச்சரிக்கை செய்திகளை வழங்குவதற்கு கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படும். ஏனைய சமுதாயத்தினருக்கு செய்தி தெரிவிப்பதற்கு குறுஞ்செய்தி ஊடாக முன்னெச்சரிக்கை செய்திகளை சமுதாயத் தலைவர்கள் வழங்குவர்.மாவட்ட, பிரதேச, மற்றும் கிராம சேவகர் பிரிவு திட்டங்கள் தொடர்பில் அரசாங்க மறுசீரமைப்பு பொறியமைப்பு உள்ளடங்கலாக ஒரு முழுமையான அனர்த்த முன்னாயத்த நிகழ்ச்சியை தயாரிப்பதனை ஒவ்வொரு அமைச்சும் பொறுப்பேற்கும்.</td></tr>
<tr><td>பொது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதிமொழியானது எவ்வாறு பங்களிக்கும்?</td><td>முழுமையான அனர்த்த முன்னாயத்த திட்டங்கள், அனர்த்த முகாமைத்துவ வழிகாட்டிகள் மற்றும் முன்னெச்சரிக்கை முறைமைகளை நடைமுறைப்படுத்தல் ஊடாக இயற்கை அனர்த்தங்களுக்கு எதிர்வினையாற்றுவதற்கு தேசிய தயார் நிலை மற்றும் சமுதாயங்களின் ஆற்றலை இந்த உறுதிமொழி பரவலாக்கும். அனர்த்தங்களின் காரணமாக உயிரிழப்பு, காயமடைதல் மற்றும் சொத்து சேதம் என்பன குறைக்கப்படலாம். அத்துடன், அனர்த்த தாக்கங்களினால் சமுதாயங்கள் மற்றும் அரசாங்கத்திற்கு ஏற்படும் சுமையையும் குறைக்கும். ஒட்டுமொத்தமாக, அனர்த்த முகாமைத்துவ செயற்பாட்டின் வினைத்திறனை அதிகரித்தல் மற்றும் குடிமக்கள் மீதான சுமையை குறைத்தலில் அனர்த்த தனித்தல் நடவடிக்கைகளில் அடையாளப்படுத்தல், தயார்படுத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றில் சமுதாய ஈடுபாடு என்பது மிகவும் முக்கியமான காரணியாகும்.</td></tr>
<tr><td>OGP விழுமியங்களுக்கு ஏன் இந்த உறுதிமொழி சம்பந்தப்படுகின்றது?</td><td>தமது வாழ்க்கைய பாதிக்கும் முக்கியமான அம்சங்கள் தொடர்பில் கருத்துக்களை வழங்குவதற்கும், திட்டங்களின் நடைமுறைப்படுத்தலில் பங்குபற்றுவதற்கும் குடிமக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதால் பொதுமக்கள் பங்குபற்றலை இந்த உறுதிமொழி முன்னிறுத்துகின்றது. குடிமக்களால் தகவலுக்கான அணுகும்வசதியையும் அது முன்னிறுத்துகின்றது.</td></tr>
<tr><td>மேலதிக தகவல்:</td><td>2005ஆம் ஆண்டு அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் நடைமுறைப்படுத்தல்: இந்த உறுதிமொழி வலுப்படுத்துகின்றது மற்றும் முன்னிறுத்துகின்றது. நிலைபேறான இலங்கை: தொலைநோக்கு மற்றும்</td></tr>
</table>

<table>
<tr><td colspan="2"></td><td colspan="3">மூலோபாய வழி மற்றும் தொலைநோக்கு 2025 வரைபுநகலில் பரிந்துரைகள் மற்றும் உறுதிமொழிகள் எழுந்தமான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் அனர்த்த தவிர்ப்பு மற்றும் நெகிழ்வுதன்மைக்கு இலக்கு வைக்கின்றது.</td></tr>
<tr><td colspan="3">சரிபார்க்கக் கூடிய வழங்கக்கூடியவையுடன் மைற்கல் நடவடிக்கை</td><td>ஆரம்ப திகதி:</td><td>முடிவுத் திகதி:</td></tr>
<tr><td colspan="3">1. பாதிக்கப்பட்ட நபர்கள். சமுதாயம் சார் நிறுவனங்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் உள்ளடங்கலாக ஒரு கலந்தாய்வுச் செயற்பாட்டின் ஊடாக தற்போதுள்ள முன்னாயத்த திட்டங்களை அனர்த்த முகாமைத்துவ நிலையம் மீளாய்வு செய்யும்.</td><td>ஒக்டோபர் 2018</td><td>மார்ச் 2019</td></tr>
<tr><td colspan="3">2. மாவட்ட, பிரதேச மற்றும் கிராம சேவகர் பிரிவு மட்டங்களில் அனர்த்த முன்னாயத்த திட்டங்களை தயாரிப்பதற்கு சமுதாய மற்றும் பங்குதாரர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் வசதியளிக்கின்றது.</td><td>ஏப்ரல் 2019</td><td>டிசம்பர் 2019</td></tr>
<tr><td colspan="3">3. ஒதுக்கப்பட்ட அல்லது பலவீனமாக குழுக்களுடன் கலந்தாய்வு செயற்பாடு ஒன்றின் உடாக அனர்த்த முகாமைத்துவ வழிகாட்டிகள் தயாரிக்கப்படும். தேவைகளை அடையாளங் காண்பதற்கு அனைத்து பங்குதாரர்களுடனும் கலந்தாய்வு கூட்டங்கள் நடைபெறும். வழிகாட்டிகள் பகிரப்படும் என்பதுடன்,வழிகாட்டிகளின் நடைமுறைப்படுத்தல் தொடர்பான பயிற்சியானது பங்குதாரர்களுக்கு வழங்கப்படும்.</td><td>ஒக்டோபர் 2019</td><td>மே 2020</td></tr>
<tr><td colspan="3">4. சமுதாயங்களில் உள்ளவர்களுக்கு முன்னெச்சரிக்கை செய்தியை வழங்குவதற்கு வினைத்திறன் மிக்க முறை ஒன்று உருவாக்கப்படல். பிரதேசத்தின் ஏனைய சமுதாய உறுப்பினர்களுக்கு தெரிவிப்பதற்கு அடையாளங் காணப்பட்ட சமுதாயத் தலைவர்களுக்கு குறுஞ்செய்தியூடான முன்னெச்சரிக்கை செய்திகள் வழங்கப்படும்.</td><td>ஏப்ரல் 2019</td><td>டிசம்பர் 2019</td></tr>
<tr><td colspan="3">5. மாவட்ட பிரதேச மற்றும் கிராம சேவகர் திட்டங்களின் அடிப்படையில், ஒரு முழுமையான அனர்த்த முன்னாயத்த நிகழ்ச்சி, அரசாங்க மறுசீரமைப்பு பொறியமைப்பு உள்ளடங்கலாக, ஒவ்வொரு அமைச்சினாலும் தயாரிக்கப்படும்.</td><td>ஜனவரி 2020</td><td>மே 2020</td></tr>
<tr><td colspan="5">தொடர்புத் தகவல்கள்</td></tr>
<tr><td colspan="2">நடைமுறைப்படுத்தல் நிறுவனத்தில் பொறுப்பில் உள்ள நபரின் பெயர்:</td><td colspan="3">Dr S Amalanadan</td></tr>
<tr><td colspan="2">பதவி நிலை, திணைக்களம்</td><td colspan="3">Director general, Disaster management Centre</td></tr>
<tr><td colspan="2">மின்னஞ்சல், தொலைபேசி</td><td colspan="3">email – dg@dmc.gov.lk<br>TP – 011 2136100<br>077 3957896</td></tr>
<tr><td rowspan="2">சம்பந்தப்பட்ட ஏனைய செயற்பாட்டாளர்கள்</td><td>சம்பந்தப்பட்ட அரச செயற்பாட்டாளர்கள்</td><td colspan="3">National Disaster Relief Services Centre, National Building Research Organization, Department of Irrigation, Meteorological Department, Central Environmental Authority, Coast Conservation Department, Natoinal Aquatic Resources, Research & Development Agency</td></tr>
<tr><td>CSO, தனியார் துறை, பல்தரப்பு செயற்குழுக்கள்</td><td colspan="3">Related CSOs</td></tr>
</table>